**யடியன்தொட்டை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 25 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் யடியன்தொட்டை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்காக நீதி மன்ற தண்டப்பண வருமானத்தை சேகரிப்பதற்காக செலுத்த வேண்டிய ஆளணி கொடுப்பனவு ரூபா 270,690 மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய கணக்காய்வு கட்டணம் ரூபா 82,567 யினை மீளாய்வாண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமலிருக்க கவனம் செலுத்துகிறேன். |
| (ii) | முன்னைய ஆண்டின் உள்ளுராட்சி வேலைகள் நிருவாகத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 217,910 யினை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமலிருக்க கவனம் செலுத்துகிறேன். |

(ஆ) **இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 04 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளிற்கிடையில் ரூபா 2,273,882 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | குறித்த மீதிகளின் வேறுபாடுகளை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 திசெம்பர் சம்பள மீள் நிரப்பல் ரூபா 182,582 தொகை 2019 பெப்ரவரி மாதம் கிடைத்துள்ளது. அங்கத்தவர் கொடுப்பனவு ரூபா 120,000 மீள் நிரப்படாததனால் குறித்த அங்கத்தவர்களிடமிருந்து அறவிடுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஊழியர் கடன்களை எதிர் வரும் ஆண்டின் போது கண்டறிந்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். முத்திரை வரியின் ரூபா 390 ஆன வித்தியாசத்தை 2019 ஆண்டின் போது தீர்க்கப்பட்டுள்ளதுடன் வானங்கள் கணக்கீடு செய்யும் போது ஏற்பட்டிருந்த குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) **தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் முன் கொண்டு வரப்பட்ட ரூபா 65,621 ஆன தொங்கள் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு இயலாமலிருந்தது. | தேவையான சீராக்கங்களை செய்து தொங்கள் கணக்கை தீர்திக்கொள்ள வேண்டும். | 2019 ஆண்டின் போது கணக்கு தயாரிக்கும் போது தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஈ)** **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(i) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த பெற வேண்டிய வருமான உதவி ரூபா 120,000 ஆனது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற வேண்டிய வருமான உதவிகளை குறித்த அங்கத்தவர்களிடமிந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பட்டுள்ளது. |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 3,306,679 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் போது ரூபா 1,721,115 ஆன செலுத்த வேண்டிய கணக்குகள் தீர்க்கப்பட்டள்ளது. |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 158 உம் 159 பிரிவு மற்றும் 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதி 33 | 86,181 | ஓராண்டு காலாத்தை விஞ்சியிருந்த வீத வரி மற்றும் ஏக்கர் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் பிரகாரம் நிலுவை குத்தகை தொகையை அறவிடப்பட வேண்டும். | 2019 ஜூன் 30 அன்று அனைத்து வீத வரி நிலுவை மற்றும் ஏக்கர் வரி நிலுவை தொகைகளை அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள து. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் | | | | |
| (i) 571 (2) | 68,611 | 2006 ஆண்டு முதல் 2015 வரை கணக்கீடு செய்யப்பட்டிருந்த பொது வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2006 ஆண்டு முதல் 2015 வரை ரூபா 399,749 ஆன பொது வைப்பை தீர்ப்பதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது டன் எஞ்சிய தொகையை விடுவிப்பது தொடர்பாக இறுதி நினைவூட்டல் கடிதத்தை அனுப்பியதன் பின் வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) நிதிப் பிரமாணம் 1646 | - | 04 வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் | நிதிப் பிரமாணம் பிரகாரம் | 2019 ஆண்டு முதல் உரிய தினத்திற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஓட்டக் குறிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும் | சபையின் வாகனங்களின் ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த செயற்பாட்டு சுருக்கங்களை அனுப்புவதற்கு நடவடிககை எடுக்கிறேன். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | - | சபைக்கு சொந்தமான 05 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | சபைக்கு சொந்தமான வாகனங்களில் எரி பொருள் பயன்பாட்டை பரிசீலிக்க குழுவொன்று நியமித்துள்ளதுடன் அக் குழுவினூடாக தற்போது 03 டெக்டர் வண்டியினது எரி பொருள் பயன்பாட்டை பரீட்சித்துள்ளதுடன் எஞ்சிய வாகனங்களில் எரி பொருள் பரிசீலனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 இலக்க உள்ளுராட்ச்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | 05 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ள வேண்டிய வித வரி மதிப்பீடு 2012 ஆண்டின் பின் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | 2019 ஆணடின் புதிய வீத வரி பெறுமதி மதிப்பீடு தற்போது மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 11,301,488 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,042,506 ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 4,959,036 | 4,959,036 | 4,257,,495 | 790,972 | 4,356,345 | 4,356,345 | 3,532,844 | 823,501 |
| (ii) | வாடகை | 5,759,118 | 5,759,118 | 5,648,196 | 203,671 | 91,136 | 91,136 | 19,385 | 71,750 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 828,335 | 828,335 | 775,151 | 53,184 | 1,365,682 | 1,365,682 | 1,352,531 | 13,150 |
| (iv) | ஏனைய வருமானம் | 74,993,272 | 74,993,272 | 56,611,312 | 26,762,732 | 14,052,447 | 14,052,447 | 3.363,031 | 17,415,479 |

### 2.2.2 காணி குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய காணி குத்தகை ரூபா 77,240 யினை அறவிடுவதற்கு இயலாமலிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த காணியின் உறுத்துரிமை தொடர்பாக நிலவும் பிரச்சினைக்குரிய நிலைமையினால் பெட்ரோலிய கூட்டுத்தாபத்னதால் குறித்த வாடகை செலுத்தப்படாததுடன், காணியின் பிரச்சினைணை தீர்த்துக் கொண்டதன் பின் குத்தகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளிரமிடந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா 5,528,547 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 17,602,939 ஆனது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற தண்டப்பண அட்டவணை தயார் செய்யப்படுவதுடன் துரிதமாக அந் நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ரூபா 12,868,689 ஆன முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு மாகாண சபைக்கு அனுப்பியுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **துணைச் சட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் துணைச் சட்டம் விதிக்க வேண்டிய 18 பிரதான விடயங்களில் மீளாய்வாண்டு இறுதியில் 06 விடயங்களுக்காக மாத்திரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தன. | துணைச் சட்டங்களை இயற்றி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் துணைச் சட்டம் விதிக்க வேண்டிய 10 விடயங்கள் தொடர்பான துணை சட்ட வரைவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதனூடாக சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்து அத் துணைச்சட்டங்களை துரிதமாக விதித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய முன்னேற்ற அறிக்கை தயாரித்திருக்காததனால் எதிர்பார்த்த இலக்குகள் அடையப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்ய முடியாமலிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய முன்னேற்ற அறிக்கை தயாரிக்க வேண்டும். | 2019 ஆண்டு முதல் செயற்படுத்தப்படுவதுடன் அவற்றின் முன்னேற்றத்தை அரையாண்டு அடிப்படையில் மகாசபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ) கழிவுப் பொருள் முகாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2008 ஆண்டு முதல் கொம்போஸ்ட் கொட்டிலிற்கு நிலையான நீர் விநியோகத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீர் விநியோகத்தை பெற்றுக் கொள்ள செயற்பட வேண்டும். | தேசிய நீர் வழங்கல் சபையினால் வழங்கும் நீர் ஏந்து பிரதேசத்தை விட உயர்வான இடத்தில் கொம்போஸ்ட் கொட்டில் அமைந்திருப்பதனால் அதன் மூலம் நீரைப் பெற்றுக் கொள்ள முடியாது என உறுதியானது. இது தொடர்பாக மகா சபை அங்கீகாரத்திற்கு சமர்பிக்கப்பட்டு நீர் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (ii) | உக்கலடையாத கழிவு பொருட்களை வெளியிடுவதற்காக சுகாதார பாதுகாப்பை கொண்ட சுற்றாடலை நேசிக்கும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உக்கலடையாத கழிவு பொருட்களை முறையாக வெளியிட வேண்டும். | இது தொடர்பாக அவ்வப் போது பிரதான அமைச்சு, உள்ளூராட்ச்சி உதவி ஆணையாளர் அறிவுட்டப்பட்டு தேவையான வசதிகளை பெற்றுத்தருமாறு கோரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கிடைத்துள்ள பிறேல் இயந்திரத்தை பயன்படுத்தி இந்த நிலைமையை சிறிதளவிற்கு தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் அடைந்துக் கொள்ள வேண்டும். | நான்காண்டு திட்டத்தினூடாக நீண்டகால திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்ச்சி மற்றும் மாகாண சபை அமைச்சு மற்றும் சபரகமுவ மாகாண சபையினூடாக வழங்கப்பட்ட ரூபா 35,267,420 பெறுமதியான 10 வாகனங்களின் உரிமையை சபைக்கு சுவீகரித்திக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களினது உரிமையை சபைக்கு சுவீகரித்திக் கொள்ள வேண்டும். | உள்ளூராட்ச்சி மற்றும் மாகாண சபை அமைச்சினூடாக வழங்கப்பட்ட 05 வாகனங்களினது மற்றும் சபரகமுவ மாகாண சபையினூடாக வழங்கப்பட்ட 05 வாகனங்களினது பதிவுரிமையை மகாசபை அங்கீகாரம் கிடைத்த பின்னர் சுவீகரித்துக் கொள்ள துரிதமாக நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் 23 பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்பாமல் அமைய அடிப்படையில் மற்றும் சேவை ஒப்பந்தம் மீது 12 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களை நிரப்ப நடவடிகை எடுக்க வேண்டியமை. | முகாமை உதவியாளர் பதவி வெற்றிடம் 01 நிரப்பப்பட்டுள்ளது. மற்றைய வெற்றிடங்கள் தொடர்பான தகவல்களை மாதாந்த அறிக்கையூடாக உள்ளூராட்ச்சி உதவி ஆணையாளருக்கும், அரையாண்டு அறிக்கை பிரதான அமைச்சின் செயலாளருக்கும் முன்வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1985 சனவரி முதல் 2015 ஆகஸ்ட் வரை காலதிற்குரிய ஓய்வு பெற்ற, சேவையை விட்டுச்சென்ற மற்றும் இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் 40 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 187,605 ஆன கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஊழழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை ரூபா 187,605 ஆன தொகையின் எதிர்காலத்தில் அறவிடப்பட முடியுமானவர்களிடமிருந்து அறவிடவும், மரணித்தவர்களினது கடன் பதிவழிக்கவும் நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

-----------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மலசல கழிவு பொருட்களை வெளியிடுவதற்காக முறைமையொன்று இல்லாததனால் மீளாய்வாண்டின் போது மலசல சேவையை பெற்றுக் கொடுக்க முடியாமலிருந்தது. | நகர்புர மக்களுக்கும் பயன்தரக்கூடிய வகையில் மலசல கழிவு பொருட்களை வெளியிடுதலை முயைகாக்க வேண்டும். | மலசல கழிவு, கழிவு பொருள் முகாமை மையத்தின் சுகாதார அகழியிற்கு 2014 ஆண்டில் அனுப்பப்பட்டதுடன் மக்கள் எதிர்பின் காரணமாக அவ்விடத்திற்கு கழிவுப் பொருட்களை அனுப்ப முடியாதிருந்தது. சுகாதார பாதுகாப்பாக மலசல கழிவை அகற்றுவதற்கு சபைக்கு சொந்தமாக இடமொன்று இல்லாததால் தேவையான ஒதுக்கீட்டை பெற்று காணியொன்றை கொள்வனவு செய்ய மற்றும் கழிவுப் பொருள் சுகாதார முறைமை ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------

**விளைவற்ற சொத்துக்கள்**

**-------------------------------------**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நகர எழுச்சி கருத்திட்டத்தின் கீழ் நிர்மானிக்கப்பட்ட வாராந்த சந்தை மற்றும் மலசலகூட தொகுதியிற்குரிய கட்டிட மேல் மாடியில் 02 கடையறைகள் மற்றும் கீழ் மாடியும் 2017 பெப்ரவரி மாதம் முதல் விளைவற்றதாக நிலவின. | சபை சொத்துக்களிலிருந்து வருமானம் ஈட்டிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நகர எழுச்சி கருத்திட்டத்தின் கீழ் நிர்மானிக்கப்பட்ட கட்டிடத்தை பல தடவைகள் டென்டர் செய்த போதும் எவரும் டென்டரை கையேற்காகததால் சபை தீர்மானப் படி அங்கு கடையறைகளை அமைத்து டென்டரிட தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அங்கு இறைச்சிக் கடையிற்காக அமைத்துள்ள கடையறையையும் வேறு வியாபாரத்திற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் டென்டர் இட தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டிற்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) ரூபா 4,124,600 பெறுமதியான 06 வாகனங்கள் 01 ஆண்டு முதல் 09 ஆண்டுகள் வரையான காலமொன்று விளைவற்றதாக நிலவுகின்றன. | விளைவற்ற வாகனங்கள் பழுதுபார்க்கப்பட அல்லது பராதீனம் செய்யப்பட வேண்டும். | சில காலமாக விளைவற்றதாக நிலவும் வாகனங்களுக்குரிய மோட்டார் வாகன பரிசோதகரின் தர பரிசீலனை அறிக்கை கிடைத்ததன் பின் பழுதுபார்க்க அல்லது ஏலவிற்பனை செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பாதீட்டினால் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த 34 செலவின விடயங்களில் ரூபா 1,137,500 ஆன மொத்த ஒதுக்கீடும் மற்றும் 18 செலவின விடயங்களில் ரூபா 13,351,139 ஆன ஒதுக்கீட்டின் 50 சதவீதம் முதல் 99 சதவீதத்திற்கிடையில் கூட்டுத் தொகை ரூபா 14,488,639 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை சாத்தியமான பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டு வெற்றிகரமான உள்ளக கட்டுப்பாடொன்று பேணப்பட வேண்டும். | 2019 ஆண்டு முதல் நிறுவப்பட்டு செயற்படுகின்றது. |